**தலைப்பு 114 – போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் மூன்றாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பன போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்தல் தொடர்பான பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) இன் பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

---

தலைப்பு 114 - போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஆகஸ்ட் 23 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின்

வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.12 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 மற்றும் 128 இல் குறிப்பிடப்பட்ட ஒழுங்கு விதிகளை நிறைவேற்றுகையில் வெளிப்படுத்தப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கி காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட்டு பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தராக மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிப் பொறுப்பை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளார்கள் என்பது அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 127 இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிதன்மை. | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** | | | |
| 127(1)(அ) | சரியான மற்றும் நிதி முறையாக செய்யப்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் சகல நிதிச் செயற்பாடுகளும் திட்டமிடப்பட வேண்டும். (திணைக்களத்தின் நடவடிக்கைகளை நிதி மற்றும் திணைக்களத்தின் கட்டளைகளுக்கு இணங்கிய வகையில் மட்டுமல்லாது அரசாங்க கடமைகளை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்பட்ட நேர்மையுடன் நடைபெறல் வேண்டும் | உள்ளகக் கணக்காய்விலுள்ள குறைபாடுகள் | 2.11 |
| 127(1)(ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கு ஒழுங்கு விதிகளை ஏற்படுத்தும் முறையொன்று தயாரித்துக் கொள்ளப்படல் வேண்டும். | மனித வள முகாமைத்துவத்தில் குறைபாடுகள் | 2.12 |
| 127(2) | தமது நிர்வாகத்தின் கீழ் காணப்படும் திணைக்களங்களில் அப்போது இருக்கும் செலவின விடயங்கள் | 1. செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம் | 2.2.1(அ) |

| | | | | |
|---|---|---|---|---|
| | உட்பட புதிதாக அல்லது கூடுதலாக செலவு செய்வதற்கான முன்மொழிவுகள் சிக்கனமாகவும் செயற்திறனான வகையிலும் அமைச்சின் பரிசீலனைக்கு உட்படுத்தல். | 2. | வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களின் செயலாற்றல் நிறைவேற்றப்படாமை | 2.2.1(ஆ)i-xvii<br>2.2.1(இ) i - iv |
| | | 3. | செயற்திட்டங்களை அமுல்படுத்துவதன் காரணமாக சுற்றாடலுக்கு ஏற்பட்டுள்ள தாக்கங்கள் | 2.2.1(ஈ) |
| | | 4. | பெறுகை நடைமுறைகளை அமுல்ப்படுத்துவதிலுள்ள குறைபாடுகள் | 2.3 |
| | | 5. | உள்ளகக் கணக்காய்வு | 2.11 |
| 127(3) | ஐயத்திற்குரிய அல்லது சிக்கலான விடயங்கள் அனைத்தையும் தமது சொந்த நிர்வாக அனுபவத்தையும் தீர்மானத்தையும் அதில் பிரயோகிப்பதற்காக அவருக்கு வழங்கப்படுகின்றதெனவும் | 1. | வாகனங்களை பயன்படுத்துவதிலுள்ள குறைபாடுகள் | 2.4(அ) |
| | | 2. | அலுவலகத்தை செயற்படுத்துவதிலுள்ள குறைபாடுகள் | 2.4(ஆ) |
| | | 3. | வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள் | 2.4(இ) |
| 127(4) | தமது ஒவ்வொரு கணக்கீட்டு உத்தியோகத்தரால் ஒதுக்கீட்டுக் கணக்குகள் முறையாக சமர்ப்பிக்கப்படுவதாகவும் தாம் அனுப்பி கையொப்பமிடுவதற்கு முன்னர் அமைச்சினால் பரீட்சிக்கப்பட்டதெனவும் அவ்வாறே மதிப்பீடுகளில் நிதி ஏற்பாடு மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கு இடையே காணப்படும் கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு தம்மால் அழுத்தமாக புலனாய்விற்கு உட்படுத்தப்படல். | 1. | வருடாந்த பாதீட்டு எல்லையை மிகைத்து கடப்பாடுகளை மேற்கொள்ளல் | 2.5 |
| | | 2. | பொது வைப்புக் கணக்குகளிலுள்ள குறைபாடுகள் | 2.10 |
| 127(5) | திணைக்களத்தின் மதிப்பீடுகளில் நிதிஏற்பாடு மற்றும் செலவினத்திற்கு இடையே உள்ள கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு அமைச்சினால் நுட்பமாக புலனாய்விற்கு உட்படுத்தப்பட்டதாகவும். | 1. | வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்தாமை | 2.7(அ)(i) |
| | | 2. | மிகை நிதி ஏற்பாட்டை வழங்குதல் | 2.7 (அ)(ii) |

| | | | |
|---|---|---|---|
| | | 3. குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீட்டின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட நிதிஏற்பாட்டை பயன்படுத்துவதிலுள்ள குறைபாடுகள் | 2.7(அ)(iii) |
| 127(6) | கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் பொறுப்பிற்கு வெளியே காணப்பட்ட வருமானம் அல்லது அரசிற்கு கிடைக்க வேண்டிய ஏனைய கட்டணங்கள் சேகரிக்கும் செயற்பாடுகளை கூடுதல் கவனத்துடன் செயற்பாட்டு அமைச்சின் பரிசோதனைக்கு உட்படுத்துதல் | 1. வருமானக் கணக்குகளிலுள்ள குறைபாடுகள் | 2.8 |
| | | 2. அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளில் குறிப்பிடப்பட்ட குறைபாடுகள் | 2.9 |

**நிதிப்பிரமாணம் 128 இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிதன்மை.**

---

**நிதிப்பிரமாணம்**

---

| | | | |
|---|---|---|---|
| 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதிஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்கைளக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித்தி திட்டங்களை பூரணப்படுத்துவற்கு மற்றும் நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல் | வருடாந்த பொருள் மெய்மையாய்வினை மேற்கொள்வதிலுள்ள குறைபாடுகள் | 2.4(இ) |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

### 2.2 அமுல்படுத்தப்பட்டுள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள்

### 2.2.1 வெளிநாட்டு உதவி செயற்திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) செயற்திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 36,166 மில்லியன் தொகையான மாத்திறை - கதிர்காமம் புகையிரத வீதியை நிர்மாணிக்கும் செயற்திட்டம் 2013 ஆகஸ்ட் 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2016 யூலை 31 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. செயற்திட்டத்தின் வேலையை முறைப்படியாக நிறைவேற்றுவதற்கு ஒப்பந்தகாரருக்கு முடியாமையின் காரணமாக 2018 ஒக்தோபர் 26 ஆந் திகதி வரை மீண்டும் ஒரு தடவை காலம் நீடிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களின் செயலாற்றல்**

**சமிச்ஞை முறைமையை உருவாக்குதல்**

மாத்தறையிலிருந்து கதிர்காமம் வரையான புகையிரதப் பாதையை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் மாத்திறையிலிருந்து பெலியத்த வரையிலான மின்சார சமிக்ஞை மற்றும் புகையிரத கடவைகளில் பாதுகாப்பு முறைமையைப் பொருத்துவதற்காக ஐக்கிய அமெரிக்க குடியரசு டொலர் 16,975,533 தொகையான ஒப்பந்த பெறுமதிக்கு திருத்திய உடன்படிக்கை (Addendum) 2017 யூலை 27 ஆந் திகதி கையெழுத்திடப்பட்டிருந்ததுடன் அது சம்பந்தமாக இடம்பெற்ற கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(i) தொடக்க உடன்படிக்கையில் சமிஞ்சை முறைமையை நீக்குதல்**

சமிக்ஞை மற்றும் மின்சார வெளிச்ச முறைமையையும் உள்ளடக்கி ஐக்கிய குடியரசு டொலர் 290 மில்லியனான தொடக்க ஒப்பந்த உடன்படிக்கையின் ஒப்பந்த கிரயத்தின் பிரகாரம் (Schedule of Contract Price) தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நிர்மாணங்களைச் சிபார்சு செய்திருந்தும் 2010 யூலை 22 ஆந் திகதிய அமப/10/1352/445/028 ஆம் இலக்க அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் இந்த சமிச்ஞை முறைமையை நிறுவுதல் தொடக்க ஒப்பந்தத்திலிருந்து நீக்கப்பட்டிருந்தது. பின்னர் 2017 மே 24 ஆந் திகதிய அமப/17/0974/709/039/ரீபீஆர் ஆம் இலக்க அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் திருத்திய உடன்படிக்கையின் மூலம் தொடக்க ஒப்பந்தத் கம்பனியாகிய சயினா மெசினறி இம்போட் என்ட எக்ஸ்போட் கோப்பரேசன் நிறுவனத்திற்கு ஒப்பந்தம் மீண்டும் 06 ஆண்டுகளை அண்மித்த காலத்தின் பின்னர் வழங்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக செயற்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கு தாமதமடைந்திருந்தும் ஒப்பந்தகாரருக்கு தாமதக் கட்டணத்தைச் செலுத்தாது ஒப்பந்த காலத்தை நீடிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

**(ii) ஒப்பந்தத்தை வழங்குதல்**

---

தேசிய பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.1 ஆம் பிரிவின் பிரகாரம் சர்வதேச போட்டி கேள்விகளைக் கோரி ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்பட வேண்டிய போதிலும் சமிக்ஞை முறைமையை நிறுவுகின்ற ஒப்பந்தம் போட்டி கேள்விகளைக் கோராது மாத்தறை - கதிர்காமம் புகையிரப் பாதையை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்தின் மேலதிக நிதி ஏற்பாட்டிலிருந்து (Provisional Sum) எஞ்சிய நிதிஏற்பாட்டின் அடிப்படையில் தொடக்க ஒப்பந்த கம்பனிக்கு ஐக்கிய குடியரசு டொலர் 16,975,533 கிரயத்திற்கு 2017 மே 24 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரத்தின் பேரில் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

**(iii) ஒப்பந்த நிகழ்ச்சித்திட்டங்களை திருத்தம் செய்தல்**

---

ஒப்பந்த நிபந்தனையின் 8.3 ஆம் பிரிவின் பிரகாரம், ஒப்பந்தகாரரால் சமர்ப்பிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் செயல்முன்னேற்றத்தை அடைந்துகொள்ளமுடியாத சந்தர்ப்பங்களில் திருத்திய நிகழ்ச்சித்திட்டம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் ஐக்கிய குடியரசு டொலர் 16,975,533 கிரயமான மேற்கூறிய ஒப்பந்தத்தின் ஒப்பந்தக்காரரால் 2017 யூலை இறுதியில் சமர்ப்பிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் செயற்பாடுகள் நிறைவேற்றப்படாததன் அடிப்படையில் திருத்திய நிகழ்ச்சித்திட்டம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான திருத்திய நிகழ்ச்சித்திட்டம் 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக திட்டமிடப்பட்ட செயல்முன்னேற்றத்தையும் உள்ளபடியான செயல்முன்னேற்றத்தையும் மதிப்பீடு செய்ய முடியாதிருந்தது.

**(iv) பெறுகைத் திட்டத்தை சமர்ப்பித்தல்**

---

ஒப்பந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் ஒப்பந்தகாரரால் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டு செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் மேற்கூறிய ஒப்பந்தத்தின் சமிச்ஞை உபகரணங்களையும் துணைக் கருவிகளையும் வழங்குவதற்காக ஐக்கிய குடியரசு டொலர் 12.91 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தும் அதற்காக பெறுகைத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக ஒப்பந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் சமிக்ஞை துணைக் கருவிகளை கொள்வனவு செய்தல் 2017 ஆகஸ்ட் மாதத்திலிருந்து 2018 மார்ச் மாதம் வரையான காலத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய போதிலும், அதற்காக கால அட்டவணையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை துணைக் கருவிகளை கொள்வனவு செய்ய முடியாதிருந்தது.

**(v) நிர்மாணங்களின் செயல் முன்னேற்றம்**

---

சமிஞ்சை முறைமையை நிறுவும் ஒப்பந்தம் 2017 யூலை மாதம் ஆரம்பிக்கப்பட்டு 2018 ஆகஸ்ட் அதாவது 13 மாதங்களில் புகையிரதம் ஓடுவதற்காக ஒப்படைக்கப்பட வேண்டிய போதிலும் 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை நிர்மாண செயல் முன்னேற்றம் 36 சதவீதமாக இருந்தது.

**(இ) மாத்தறை - கதிர்காமம் புதிய புகையிரதப் பாதையை நிர்மாணிக்கும் செயற்திட்டம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) ஒப்பந்த நிகழ்ச்சித்திட்டத்தை சமர்ப்பித்தல்**

ஒப்பந்த நிபந்தனையின் 8.3 ஆம் பிரிவின் பிரகாரம் ஒப்பந்தகாரரால் உரிய செயல்முன்னேற்றம் திட்டமிடப்பட்ட கால எல்லையின் பிரகாரம் நிறைவேற்ற முடியாத சந்தர்ப்பங்களில் திருத்திய நிகழ்ச்சித்திட்டம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2016 ஒக்தோபர் மாதம் சமர்ப்பித்த 13 ஆம் இலக்க திருத்திய நிகழ்ச்சித்திட்டத்தின் பின்னர் ஒப்பந்தகாரரால் 01 ஆண்டு 07 மாதங்கள் எடுத்ததன் பின்னர் 2018 மே 31 ஆந் திதி திருத்திய ஒப்பந்த நிகழ்ச்சித்திட்டம் (Master Programme) தாமதித்து சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக நிர்மாண செயல் முன்னேற்றங்களை பரீட்சிக்க முடியாமை, மிகுதி வேலைகளை இனங்காண்பதற்கு முடியாமை ஆகிய காரணங்களால் ஒப்பந்த மேற்பார்வையை முறைப்படியாக நிறைவேற்ற முடியாமையும் நிர்மாணித்தல் தாமதங்களும் இடம்பெற்றிருந்தது.

**(ii) புகையிரப் பாதையை நிர்மாணித்தல்**

மேற்கூறிய ஒப்பந்தத்தின் 32 கிலோ மீற்றர் நீளமான புகையிரப் பாதையை நிர்மாணிப்பதற்காக ஐக்கிய குடியரசு டொலர் 26.88 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டு 2018 மார்ச் 31 ஆந் திகதியளவில் ஐக்கிய குடியரசு டொலர் 11.85 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- **ஒப்பந்த நிர்மாணங்களை நிறைவேற்றாது கொடுப்பனவு செய்தல்**

  புகையிரதப் பாதையை நிர்மாணிப்பதற்காக (Main Track Laying) உடன்படிக்கையின் பிரகாரம் ஐக்கிய குடியரசு டொலர் 8,064,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2018 மார்ச் இறுதிவரை அதற்காக ஐக்கிய குடியரசு டொலர் 5,126,458 தொகை ஒப்பந்தகாரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. எனினும், அத்திகதியில் உள்ளவாறான பௌதீக செயல்முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவில் அல்லது ஆலோசனை ஒப்பந்த கம்பனியிடம் இருக்கவில்லை. எனவே அப்பெறுமதியைக் கொடுப்பனவு செய்வதற்காக 20.3 கிலோ மீற்றர்கள் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டிய போதிலும், 2018 மே 27 ஆந் திகதிய ஒப்பந்தத்தின் பௌதீக பரிசோதனையின் போது அவ்வாறு அந்த அளவு நிர்மாணம் இடம்பெற்றிருக்கவில்லை.

- அவ்வாறே பாதையை தயார்படுத்தலின் (3rd Tamping) பௌதீக பரிசோதனை மேற்கொண்ட 2018 மே 27 ஆந் திகதி வரை நிர்மாணம் மேற்கொள்ளப்படாதிருந்தும் அதற்காக ஐக்கிய குடியரசு டொலர் 564,547 தொகை 2018 மார்ச் 31 ஆந் திகதி உள்ளக கொடுப்பனவு சான்றிதழ் பத்திரம் 47 இன் மூலம் ஒப்பந்தகாரருக்குக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**(iii) மூலப் பொருட்களுக்காக கொடுப்பனவு செய்தல்**

--------------------------------------------------------------------------------

தொடக்க ஒப்பந்த உடன்படிக்கை நிபந்தனையின் 14.5(சீ) பிரிவின் பிரகாரம் வேலைத் தளத்திலுள்ள மூலப்பொருட்களுக்காக கொடுப்பனவு செய்யலாகாது என்ற போதிலும் 2018 மார்ச் இறுதி வரை (துறைமுகம் வரை எடுத்துச் செல்லப்பட்ட) புகையிரத தண்டவாளங்களுக்காக ஐக்கிய குடியரசு டொலர் 3,648,703 மற்றும் வேலைத் தளத்திலுள்ள சிலிப்பர் கட்டைகள் மற்றும் கருங்கற்களுக்காக ஐக்கிய குடியரசு டொலர் 1,413,734 தொகை புகையிரத பாதை நிர்மாணத்தை பூர்த்தி செய்து கொடுப்பனவு செய்வதற்குப் பதிலாக மூலப்பொருட்களுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**(iv) தண்டவாளம் மற்றும் சிலிப்பர் கட்டைகளின் தரத்தை உறுதிப்படுத்தல்**

--------------------------------------------------------------------------------------------------------------------

ஒப்பந்த நிபந்தனையின் 7.4 ஆம் பிரிவின் பிரகாரம் ஒப்பந்தக்காரரால் தண்டவாளங்களினதும் சிலிப்பர் கட்டைகளினதும் தரத்தை உறுதிப்படுத்துவதற்காக தரப் பரிசோதனைச் சான்றிதழ் வழங்கப்பட வேண்டிய போதிலும், 2018 மார்ச் 31 ஆந் திகதி ஐக்கிய குடியரசு டொலர் 4,526,117 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட தண்டவாளங்களினதும் சிலிப்பர் கட்டைகளினதும் தரத்தை உறுதிப்படுத்துவதற்காக தரப் பரிசோதனை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இதனை உள்நாட்டில் பரிசோதனை மேற்கொண்டு அறிக்கையை வழங்குவதற்கு செயற்திட்டப் பிரிவிற்கு முடியாதிருந்தது.

**(v) இருப்புக் கட்டுப்பாடு**

---------------------------------

32 கிலோ மீற்றர் வரை புகையிரப் பாதையை நிர்மாணிப்புக்காக கொள்வனவு செய்யப்பட வேண்டிய தண்டவாளங்கள் மற்றும் சிலிப்பர் கட்டைகளின் அளவு தீர்மானிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்காக கொள்வனவு செய்யப்பட வேண்டிய தண்டவாளங்களின் அளவு, பயன்படுத்தப்பட்டுள்ள இரும்பு, மிகுதியாகவுள்ள அளவு என்பன தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய ஒரு அறிக்கையை வழங்குவதற்கு செயற்திட்ட ஆலோசனைக் கம்பனிக்கு முடியாதிருந்தது. இதன் காரணமாக கொள்வனவு செய்யப்பட்ட இரயில் தண்டவாளம் சம்பந்தமான இருப்புக் கட்டுப்பாட்டை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

**(vi) பலவீனமான மண்ணை அகற்றி மேம்படுத்தல் (Weak Soil Improvement Methods)**

------------------------------------------------------------------------------------------------------------------------

மலைச் சரிவான பிரதேசங்களிலுள்ள பலவீனமான மண்ணை அகற்றி மேம்படுத்துவதற்காக D.C.M Filling Method முறைமையானது ஒப்பந்த உடன்படிக்கையின் கொடுப்பனவு விபரங்களின் மூலம் (Schedule of payment) சிபார்சு செய்யப்பட்டிருந்தும் ஒப்பந்தகாரரால் இதற்காக எப்படியான முறைமை பயன்படுத்தப்பட்டது என்பதனை உறுதிப்படுத்தாது 2018 மார்ச் இறுதியளவில் அச்செயற்பாட்டிற்காக ஐக்கிய குடியரசு டொலர் 23,606,282 தொகை ஆலோசனைக் கம்பனியின் சிபார்சின் பேரில் செலுத்தப்பட்டிருந்தது. பயன்படுத்தப்பட்ட நடைமுறை மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைக்கான கிரயம் ஒப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**(vii) திட்டங்களுக்காக அங்கீகாரத்தை வழங்குதல் (Design Approval)**

ஒப்பந்த நிபந்தனையின் பிரகாரம் 5.1 ஆம் பிரிவின் பிரகாரம் திட்டங்களுக்காக அங்கீகாரத்தை வழங்குதல் ஆலோசனை ஒப்பந்தக் கம்பனியின் பிரதான செயற்பாடாக இருந்தும் அப்பிரிவின் பிரகாரம் 04 சந்தர்ப்பங்களின் கீழ் விபரமான வடிவமைப்பு அங்கீகாரம் வழங்கக்கூடியதாக இருந்த போதிலும் அதற்கு மாற்றமாக Approved in principle யின் கீழ் அங்கீகாரத்தை வழங்குவதற்காக 2018 மார்ச் இறுதி வரை வடிவமைப்பு அங்கீகாரத்திற்காக ஐக்கிய குடியரசு டொலர் 6,732,905 ஆலோசக ஒப்பந்தக் கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்தது.

**(viii) இறுதி வடிவமைப்பைச் சமர்ப்பித்தல் (As Built Documents)**

ஒப்பந்த நிபந்தனையின் 5.6 ஆம் பிரிவின் பிரகாரம் அங்கீகரித்த Shop Drawing இற்காக ஆலோசக ஒப்பந்தக் கம்பனியிடமிருந்து அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டியதாக இருந்த போதிலும், அதற்காக அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது ஐக்கிய குடியரசு டொலர் 52,780 செலுத்தப்பட்டிருந்தது.

**(ix) நிர்மாணித்தலில் தாமதங்கள்**

ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் நிர்மாணங்கள் 2013 ஆகஸ்ட் மாதத்தில் ஆரம்பித்து 2016 யூலை மாதத்தில் பூர்த்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் ஐக்கிய குடியரசு டொலர் 278.2 தொகை நிர்மாண ஒப்பந்தத்தின் நிர்மாணங்களானது ஒப்பந்த கம்பனியினதும் ஒப்பந்த மேற்பார்வையினதும் பலவீனங்களின் அடிப்படையில் திட்டமிடப்பட்ட காலத்தை மிகைத்து 02 ஆண்டுகளை அண்மித்த காலம் எடுத்திருந்த போதிலும் நிர்மாணங்களில் 76.1 சதவீதம் மாத்திரம் 2018 மார்ச் 31 வரை பூர்த்தி செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. ஒவ்வொரு நிர்மாணத்திற்குமான திட்டமிடப்பட்ட செயல்முன்னேற்றமும் உள்ளபடியான செயல்முன்னேற்றமும் கீழே தரப்படுகின்றன.

| விடயம் | திட்டமிடப்பட்ட செயல்முன்னேற்றம் சதவீதமாக | உள்ளபடியான செயல்முன்னேற்றம் (2018-03-31) உள்ளவாறு சதவீதமாக |
|---|---|---|
| புகையிரத நிலையங்களை நிர்மாணித்தல் | 100 | 57.2 |
| புகையிரப் பாதைகளை நிர்மாணித்தல் | 100 | 30 |
| சமாந்தரமான பாதைகளை நிர்மாணித்தல் | 100 | 0 |
| சமிக்ஞை முறைமைகளை நிர்மாணித்தல் | 100 | 9.98 |
| தற்காலிக ஒதுக்கீடுகள் | 100 | 1.3 |

**(ஒ) பக்கச் சுவர்கள் நிர்மாணித்தல்**

பக்கச் சுவர்கள் நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தக் கிரயமாக ஐக்கிய குடியரசு டொலர் 14,288,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- **Soil Nail பக்கச் சுவர் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாமை**

  ---------------------------------------------------------------------------------------------------------

  ஆலோசக ஒப்பந்தக் கம்பனியின் 2018 மார்ச் மாத செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் பக்கச் சுவர்கள் (பாதையின் வலது பக்க மற்றும் இடது பக்கம்) 21 இடங்களில் நிர்மாணிப்பதற்கு அடையாளம் காணப்பட்டிருந்தும் அதன் செயல்முன்னேற்றம் 75 சதவீதத்தை விடக் குறைவான 07 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. எவ்வாறாயினும், 2018 மார்ச் இறுதியளவில் இடைக்கால கொடுப்பனவுகள் சான்றிதழ் பத்திரம் 47 இன் மூலம் இப்பக்கச் சுவர்களை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ஐக்கிய குடியரசு டொலர் 2,857,600 ஆன முழுப்பணமும் ஒப்பந்தகாரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

- **பாதையின் எல்லைக்கு வெளியே நிர்மாணித்தல் (Construction 0f right of way)**

  ---------------------------------------------------------------------------------------------------------------------

  Soil Nail பக்கச் சுவரை நிர்மாணிக்கும் போது புகையிரப் பாதையை நிர்மாணிப்பதற்காக சுவீகரிக்கப்பட்ட காணியை மிகைத்து தனியார் காணிகளில் 17 + 750 ஆம் மைல் வலது பக்கப் பாதையில் நிர்மாணங்கள் இடம்பெற்றிருந்தது என்பது செயற்திட்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டதுடன் அதற்காக ஒப்பந்தக்காரருக்கு 2018 மார்ச் 31 ஆந் திகதி வரை அமெரிக்க குடியரசு டொலர் 144,229 செலுத்தப்பட்டிருந்தது.

- **பக்கச் சுவர் நிர்மாணிப்பதற்குப் பதிலாக மண் நிரப்புதல்**

  ---------------------------------------------------------------------------------------------

  நிர்மாண ஒப்பந்தத்தின் அங்கீகரித்த திட்டத்தின் பிரகாரம் மைல் DK 13 + 540 இலிருந்து DK 13 + 562 வலது பக்க பகுதியில் (RHS) 22 மீற்றர் நீளத்திற்கு கொங்கிறீட் பக்கச் சுவர் நிர்மாணிப்பதற்காக ஐக்கிய குடியரசு டொலர் 31,109 நிதிஏற்பாடு Scheduled of Payment (SOP) செய்யப்பட்டிருந்தும் ஒப்பந்தகாரரினால் ஒரு தனியார் காணியில் செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவின் அங்கீகாரமின்றி பக்கச்சுவர் நிர்மாணிப்பதற்குப் பதிலாக மண் நிரப்பப்பட்டு கொடுப்பனவு செய்யப்ப்டிருந்தமை பௌதீகப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. பக்கச் சுவர் நிர்மாணிப்பதற்குப் பதிலாக மண் நிரப்பியதன் காரணமாக கிரய மாற்றத்திற்காக கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக்கொண்டமைக்கான சான்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(xi) மிகுதி பக்கச் சுவர்களை நிர்மாணித்தல்**

-----------------------------------------------------------------

பக்கச் சுவர்களை நிர்மாணிப்பதன் கீழ் 28 Toe Wall பக்கச் சுவர்களை நிர்மாணிப்பதற்காக ஐக்கிய குடியரசு டொலர் 3,572,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் 2018 மார்ச் இறுதி வரையும் அதில் 08 பக்கச்சுவரின் நிர்மாணத்தை ஆரம்பிப்பதற்கு ஒப்பந்தக்காரர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்காக வடிவமைப்பு தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக்கொண்டமைக்கான சான்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், Anchor Frame பக்கச் சுவர்களுக்காக ஐக்கிய குடியரசு டொலர் 1,285,920 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் மேற்கூறிய பாதையை நிர்மாணிப்பதற்கும் ஒப்பந்தத்தில் Anchor Frame பக்கச் சுவர்

எந்தளவு மீற்றர் தூரம் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதில் எந்த அளவிற்கு கணக்காய்வுத் திகதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது மற்றும் மிகுதியாக உள்ளது எவ்வளவு என்பது தொடர்பான சான்று செயற்திட்டத்திடம் காணப்படவில்லை.

**(xii) வெளிநாட்டுக் கடனைப் பயன்படுத்துதல்**

---

கடன் உடன்படிக்கை நிபந்தனையின் 1.14 ஆம் பிரிவின் பிரகாரம் கடன் உடன்படிக்கை அமுல்ப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து 07 ஆண்டுகள் காலம் கடன் சலுகைக் காலம் வழங்கப்பட்டிருந்தும் கடன் உடன்படிக்கையானது 2013 ஏப்ரல் 19 ஆந் திகதியிலிருந்து அமுல்ப்படுத்தப்பட்டதுடன் சலுகைக் காலம் 2020 ஏப்ரல் மாதம் முடிவடையும். கடன் சலுகைக்காலம் முடிவடைவதற்கு இன்னும் 02 ஆண்டுகளுக்கு குறைவான காலம் காணப்பட்டிருந்தும் 2018 மார்ச் இறுதி வரை மொத்த நிர்மாணங்களில் 76 சதவீதம் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க புகையிரதம் ஓடி வருமானம் உழைத்தல் இடம் பெறாது கடனைச் செலுத்தும் ஆபத்தும் காணப்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டது.

**(xiii) வெளிநாட்டு நாணய மாற்று நட்டம்**

---

கடன் உடன்படிக்கை நிபந்தனையின் 1.3 ஆம் பிரிவின் பிரகாரம் கடன் உடன்படிக்கை கைச்சாத்திட்ட திகதியிலிருந்து 04 ஆண்டுகள் காலத்துள் கடன் பணத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். 2013 ஏப்ரல் மாதம் கையொப்பமிட்ட கடன் உடன்படிக்கையின் பிரகாரம் 2017 ஏப்ரல் மாதம் இறுதியளவில் முழுக் கடன் பணமும் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் நிர்மாணங்கள் தாமதித்ததன் அடிப்படையில் 2017 மே மாதத்திலிருந்து 2018 ஏப்ரல் மாதம் வரையான காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளுக்காக ரூபா 36.51 மில்லியன் அளவான வெளிநாட்டு நாணய மாற்று நட்டம் இடம்பெற்றிருந்தது.

**(xiv) சமாந்தரப் பாதைகள் நிர்மாணித்தல்**

---

தொடக்க நிர்மாண உப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் 105 சமாந்தரப் பாதைகளை நிர்மாணிப்பதற்காக ஐக்கிய குடியரசு டொலர் 1,693,000 தொகையான ஒப்பந்த கிரயம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தும் கணக்காய்வுத் திகதியான 2018 மே 27 ஆந் திகதி வரை அப்பாதைக்காக வடிவமைப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டு நிர்மாணத்தை ஆரம்பிப்பதற்கு நிர்மாணங்கள் மற்றும் ஆலோசனை ஒப்பந்த கம்பனியால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(xv) தற்காலிக நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துதல்**

---

தொடக்க நிர்மாண ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் தற்காலிக நிதி ஏற்பாட்டிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ஐக்கிய குடியரசு டொலர் 29 மில்லியன் 2017 யூலை 27 ஆந் திகதிய திருத்திய உடன்படிக்கையின் மூலம் ஐக்கிய குடியரசு டொலர் 12.02 மில்லியன் வரை குறைக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க தொடக்க உடன்படிக்கையிலிருந்து அந்த நிதி ஏற்பாட்டின் கீழ் இனங்காணப்பட்ட செயற்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக நிதி ஏற்பாட்டைக் குறைத்ததன் அடிப்படையில் நிறைவேற்றப்பட வேண்டிய வேலைகள் எவை

என்பது தெளிவாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. மேலும், திருத்திய நிதி ஏற்பாட்டிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட ஐக்கிய குடியரசு டொலர் 12.02 மில்லியனில் 2018 மார்ச் இறுதி வரையும் ஐக்கிய குடியரசு டொலர் 11.13 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது என்பதுவும் அவதானிக்கப்பட்டது.

**(xvi) புகையிரத நிலைய கட்டிடங்களை நிர்மாணித்தல்**

நிர்மாண ஒப்பந்த உடன்படிக்கையில் புகையிரத நிலைய கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கான சீமெந்துக் கற்கள் 10 Mpa வலுவுடையதாக இருக்க வேண்டும் என்பது தொழில் தருனரின் தேவைப்பாடாக (Employers Requirement) இருந்த போதிலும் ஆலோசனைக் கம்பனியின் சிபார்சின் பேரில் போக்குவரத்து அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் அது 05 Mpa வரை குறைக்கப்பட்டு நிர்மாணித்தல் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அந்த மாற்றங்களின் அடிப்படையில் நிர்மாணக் கிரயத்தின் நலன் ரூபா 6,093,829 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தும் Lump Sum கொடுப்பனவு முறைமையின் கீழ் அந்த நலன் அமைச்சிற்கு கிடைக்கின்ற முறைமை விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை.

**(xvii) காணிகளைச் சுவீகரித்தலுக்காக இழப்பீடு செலுத்துதல்**

புகையிரதப் பாதைகளை நிர்மாணிப்பதற்கான தேவைகளை இனங்கண்டு காணிகளைச் சுவீகரித்தல் இடம்பெற வேண்டிய போதிலும் நிர்மாணிப்பதற்கான தேவைப்பாடுகளை மிகைத்து காணிகள் சுவீகரிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

**(ஈ) செயற்திட்டத்தின் காரணமாக சுற்றாடலுக்கான தாக்கங்கள்**

ஒப்பந்த உடன்படிக்கையில் சேவை தருனரின் தேவைப்பாட்டிற்காக சுற்றாடல் மற்றும் சமூக ரீதியாக உருவாகின்ற சிக்கல்களுக்கு ஒப்பந்தக்காரர் சம்மந்தப்பட வேண்டிய போதிலும் 2018 மார்ச் இறுதி வரை ஒதுக்கீடு செய்யப்பட்ட ஐக்கிய குடியரசு டொலர் 250,000 முழுப் பெறுமதியும் ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தும் கணக்காய்வுத் திகதி வரை சுற்றாடல் மற்றும் சமூகச் சிக்கல்கள் பலவற்றிற்கு ஒப்பந்தக்காரர் ஈடுபடாதிருந்த 338 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

## 2.3 பெறுகை நடைமுறைகளின் மூலம் வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்

அமைச்சினால் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளவதற்காக ரூபா 293.69 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 42.99 மில்லியன் நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க ரூபா 250.07 மில்லியன் அல்லது வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் 85.36 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) வாகனப்பயன்பாடு**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சிற்கு சொந்தமாக கீழே குறிப்பிடப்பட்டவாறு 71 வாகனங்கள் காணப்பட்டதுடன் 13 வாகனங்கள் வெளி

நிறுவனங்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டிருந்ததுடன் 58 வாகனங்களை அமைச்சு பயன்படுத்தியிருந்தன. அதற்காக எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி எண்ணைக்காக ரூபா 15,089,345 தொகையும் வாகனங்களை சேவை செய்வதற்காகவும் வாகனங்களைப் பழுதுபார்ப்பதற்காகவும் ரூபா 15,559,582 தொகையும் வாகனங்களைக் காப்புறுதி செய்வதற்காக ரூபா 3,519,476 தொகையும் ஆக ரூபா 34,168,403 மொத்த தொகை செலவு செய்யப்பட்டிருந்தது.

**ஓடிய கிலோ மீற்றர் எண்ணிக்கை சமர்ப்பிக்கப்படாமை**

அமைச்சு அலுவலகங்களுக்கும் அமைச்சு உத்தியோகத்தர்களுக்கும் ஒப்படைக்கப்பட்டுள்ள 29 வாகனங்களுக்கான 2017 சனவரி மாதத்திலிருந்து ஆகஸ்ட் மாதம் வரை ஓடிய கிலோ மீற்றர் எண்ணிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) அலுவலகங்களைப் பராமரிக்கும் செலவுகள்**

அமைச்சு மாதாந்தம் ரூபா 5,141,072 வாடகையின் அடிப்படையில் பெற்றுக்கொண்ட ஒரு கட்டிடத்தில் அலுவலகங்களை பராமரித்து வந்ததுடன் வருடாந்த கட்டிட வாடகை ரூபா 61,453,924 ஆக இருந்தது. அதற்கிணங்க அலுவலகங்களைப் பராமரித்துச் செல்லும் ஒரு நபருக்கான செலவு ரூபா 259,298 ஆகும்.

**(இ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை நடாத்துதல்**

2016 ஆம் ஆண்டிற்கான மெய்மைய்யாய்வுச் சபை அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட மிகைகள் பற்றாக்குறைகள் மற்றும் செய்யப்பட்ட ஏனைய சிபார்சுகள் சம்பந்தமாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

அமைச்சினால் 13 வாகனங்கள் வெளித்தரப்பினர்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்தும் அவ்வாகனங்களின் உரிமையை ஒப்படைப்பதற்கு அல்லது மீளப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 கடப்பாடுகளும் பொறுப்புக்களும்

**வருடாந்த பாதீட்டு எல்லையை மிகைத்து கடப்பாடுகளை ஏற்படுத்துதல்**

2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 2(அ) பந்திக்கு இணக்கமற்ற வகையில் 08 செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 45.38 மில்லியன் நிதி ஏற்பபாட்டில் சேமிப்பு ரூபா 0.477 மில்லியனாக இருந்ததுடன் அதனை ரூபா 0.06 மில்லியனால் மிகைத்து ரூபா 1.34 மில்லியன் கடப்பாடு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தது.

## 2.6 நிலைபேறான அபிவிருத்தி

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இடைந்து கொள்ளும் போது உரிய செயற்பாடுகளை முடிவுறுத்துவதற்கு தேவையான உச்ச நிலைகள் இனங்காணப்பட்டிருந்தும் அவற்றை செயல் நடவடிக்கைத்திட்டத்தில் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.7 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துதல்**

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 2013 | மீண்டுவருபவை | 7,032 | 6,893 | 139 | 1.98 |
| | மூலதனம் | 5,998 | 4,555 | 1,443 | 24.06 |
| | **மொத்தம்** | **13,030** | **11,448** | **1,582** | **11.73** |
| 2014 | மீண்டுவருபவை | 7,556 | 7,548 | 8 | 0.11 |
| | மூலதனம் | 17,454 | 13,024 | 4,430 | 25.38 |
| | **மொத்தம்** | **25,010** | **20,572** | **4,438** | **17.44** |
| 2015 | மீண்டுவருபவை | 12,595 | 12,471 | 124 | 0.98 |
| | மூலதனம் | 15,785 | 8,420 | 7,365 | 46.66 |
| | **மொத்தம்** | **28,380** | **20,891** | **7,489** | **26.39** |
| 2016 | மீண்டுவருபவை | 17,910 | 17,238 | 672 | 3.75 |
| | மூலதனம் | 32,009 | 17,768 | 14,241 | 44.49 |
| | **மொத்தம்** | **49,919** | **35,006** | **14,913** | **29.87** |
| 2017 | மீண்டுவருபவை | 17,838 | 14,072 | 3,766 | 21.11 |
| | மூலதனம் | 18,114 | 7,931 | 10,183 | 56.22 |
| | **மொத்தம்** | **35,952** | **22,003** | **13,949** | **38.80** |

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) ஒதுக்கீட்டுக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தாமை

10 செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 743 மில்லியன் மொத்த தேறிய நிதிஏற்பாடு எதுவித பயன்பாடுமின்றி முழுமையாகச் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) அதிக நிதி ஏற்பாட்டினை வழங்குதல்

42 செலவு விடயங்களுக்காக ரூபா 13,855 மில்லியன் கூட்டு மொத்தமான கூடுதல் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டதன் காரணமாக அச் செலவு விடயங்களுக்குரிய நிதி ஏற்பாட்டில் ரூபா 8,180 மில்லியன் மொத்த தொகை பயன்படுத்தப்பட்டதன் காரணமாக சேமிப்பு வழங்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டில் 05 சதவீதத்திலிருந்து 99 சதவீதம் வரையான வீச்சுடைய அளவினைக் கொண்டிருந்தது.

(iii) **குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீட்டின் மூலம் நிதி ஏற்பாட்டினை வழங்குதல்**

முறையான ஆய்வுகள் இன்றியும் தேவைப்பாட்டினை இனங்காணாமலும் மதிப்பீடு தயாரிக்கப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாடு வழங்கப்படாத 04 மூலதன செலவு விடயங்களுக்காக குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 19,219 மில்லியன் நிதி எற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதி ஏற்பாட்டில் ரூபா 3,703 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.8 மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்

அமைச்சினால் 2017 ஆம் ஆண்டிற்காக 01 வருமான குறியீட்டிற்கு ரூபா 14,400 மில்லியன் மொத்த தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 15,446 மில்லியன் மொத்த தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 107.26 சதவீதமாகும்.

### 20.03.02.08 ஆம் இலக்க வருமான குறியீடு – வெளியேறல் வரி

அமைச்சினால் வருமானத்தை சேகரிப்பதற்குரிய வரி அல்லது வருமானங்களை அறிவிடும் சதவீதம் மீளாய்வாண்டின் சனவரி மாதத்திலிருந்து அதிகரித்திருந்ததனால் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தை மிகைத்து வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது.

## 2.9 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்

அமைச்சிற்குரிய 11401 ஆம் விடய இலக்கததின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடியானவை | இழிவு எல்லை | உள்ளபடியானவை | உச்ச எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 10 | 9.98 | 6 | 6.6 | 45 | 32.50 |

### நிலுவையாகவிருந்த கடன் மீதிகளை அறவீடு செய்யாமை

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் மொத்த தொகை (இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளைத் தவிர்த்து) ரூபா 1,240,840 ஆக இருந்ததுடன் அந்த நிலுவையாக இருந்த மீதிகள் 01 ஆண்டிலிருந்து 19 ஆண்டுகள் வரையான வீச்சுடைய காலமாகக் காணப்பட்டு வந்த போதிலும் அந்நிலுவையாகக் காணப்பட்ட கடன் மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கை பலவீனமான நிலையில் காணப்பட்டது.

**2.10 பொது வைப்புக் கணக்கு**

அமைச்சின் கீழுள்ள 03 பொது வைப்புக் கணக்குகளின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் மொத்த தொகை ரூபா 187,887 ஆக இருந்ததுடன் 02 ஆண்டுகளை மிகைத்த (காணிகளைத் தவிர்த்து) ரூபா 114,552 மொத்த தொகையான 01 வைப்பு சம்பந்தமாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.11 உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் நிதிப்பிரமாணம் 134(3) இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.12 மனித வளங்கள் முகாமைத்துவம்**

**இணைத்துக்கொள்ளப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவுகள்**

போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான, மற்றும் வெற்றிடமான பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்காக அமைச்சினால் ஆளணி வேதனச் செலவுத் தொகுதிக்காக ரூபா 103 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க தனிநபருக்கான செலவு ரூபா 551,690 ஆகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரத்த பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடமான பதவியணியினர் |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 38 | 28 | 10 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 05 | 05 | - |
| (iii) | இரண்டாம் மட்டம் | 131 | 103 | 28 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 84 | 51 | 33 |
| | **மொத்தம்** | **258** | **187** | **71** |